# ஊட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் கலந்து கொள்ளும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மேடை அமைக்கும் பணி

## நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆய்வு



**ஊட்டி, மார்ச்.30-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரும் 5-ந்தேதியன்று நீலகிரி மாவட்டத்திற்கு வருகை புரிந்து, 6-ந்தேதி அன்று ஊட்டி அரசு கலை கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு, பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளதால், விழா நடைபெறும் இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், ஆகியோர் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில் நேற்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 05 மற்றும் 06ம் தேதிகளில் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை புரிந்து, நீலகிரி மாவட்ட மக்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து,

பல்வேறு துறைகளின் சார்பில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி, பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளதால், விழா நடைபெறும் இம்மைதானத்தில், நடைபெற்று வரும் மேடை அமைக்கும் பணி, விழாவிற்கு வருகை தரும் பொதுமக்களின் பாதுகாப்பு வசதிகள் மற்றும் வாகன நிறுத்திமிடம், உள்ளிட்ட முன்னேற்பாடு பணிகள் இன்று நேரில் பாவையிட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மணிகண்டன், ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ரமேஷ், ஊட்டி நகராட்சி ஆணையாளர் ஸ்டேன்லிபாபு, நகராட்சிப் பொறியாளர் சேகரன், நகராட்சி துணைத்தலைவர் ரவிக்குமார், திட்டக்குழு உறுப்பினர் திரு.ஜார்ஜ், வட்டாட்சியர் சங்கர்கணேஷ் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு நஞ்சநாடு ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக்கூட்டம்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பங்கேற்பு



**ஊட்டி, மார்ச்.30-**

நீலகிரி மாவட்டம், ஊட்டி ஊராட்சி ஒன்றியம், நஞ்சநாடு ஊராட்சி சமுதாயக் கூடத்தில் உலக தண்ணீர் தினத்தை (22.03.2025 அன்று) முன்னிட்டு,

நேற்று (29.03.2025) நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர்

லட்சுமி பவ்யா தண்ணீரு, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இக்கிராம சபை கூட்டத்தில், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, சுத்தமான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்வது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், தூய்மை பார இயக்க திட்டம், தொழிலாளர் துறை, கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின்கீழ் பயனாளிகளை தேர்ந்தெடுத்தல், ஊரக வீடுகள் சீரமைத்தல் திட்டம், ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் செயல்படும் கிராம குடிநீர் உட்கட்டமைப்பு பணிகள் குறித்தும், போன்ற கூட்டப்பொருள்;கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

தொடர்ந்து மாவட்ட கலெக்டர் மகளிர் திட்டத்தின் சார்பில், 5 மகளிர் சுய உதவிக்குழுவிற்கு தொழில் தொடங்க சமுதாய முதலீட்டு நிதியின் கீழ், ரூ.5.50 இலட்சத்திற்கான காசோலைகளையும், 2 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பாக ரூ.17 இலட்சத்திற்கான காசோலைகளையும் என மொத்தம் 7 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து மாவட்ட கலெக்டர் தலைமையில், 'கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழியினை" அனைத்து அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் ஏற்றுக் கொண்டனர்.

முன்னதாக, மாவட்ட சமூக நலத்துறை, சுகாதாரத்துறை, மகளிர் திட்டம் உள்ளிட்ட துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை கலெக்டர் பார்வையிட்டார்.


இக்கிராம சபை கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் இ.ஆ.ப., தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, மகளிர் திட்ட இயக்குநர் காசிநாதன், மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் பிரவீணாதேவி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணகுமார், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் (பொ) தீபா, ஊட்டி வட்டாட்சியர் சங்கர்கணேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அண்ணாதுரை, சுரேஷ், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக சுஜாதா பதவி ஏற்றுக்கொண்ட போது எடுத்த படம்.

# ரெயில் பயணத்தின்போது தங்களது குறைகளை பதிவிட்டால் அதை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை

## கோவை ரெயில்வே ஆய்வாளர் மீனாட்சி பேச்சு



**ஊட்டி, மார்ச்.30-**

ரெயில் பயணத்தின்போது வாட்சப் குழுவில் பெண்கள் தங்களது குறைகளை பதிவிட்டால் அதை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என கோவை உட்கோட்ட ரெயில்வே ஆய்வாளர் மீனாட்சி கூறினார்.

நீலகிரி மாவட்டம் ஊட்டி ரெயில்வே போலீசார் சார்பில் ரெயில் பெண் பயணியர் பாதுகாப்பு குழு தொடக்க விழா மற்றும் பெண்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் ஊட்டியில் நேற்று நடந்தது.; பிரீத்தி கிளாசிக் டவர்ஸ் ஓட்டலில் நடைபெற்ற முகாமிற்கு ரெயில்வே உதவி ஆய்வாளர் ராமன் வரவேற்றார். ஊட்டி துணை கண்காணிப்பாளர் நவீன்குமார் தலைமை தாங்கி பேசினார். கோவை ரெயில்வே போலீஸ் ஆய்வாளர் மீனாட்சி கூறியதாவது:- ரெயில்வே போலீசார் சார்பில் பெண் பயணிகள் பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. ரெயில் பயணத்தின்போது பெண்கள் பாதுகாப்பாக பயணம் செய்ய இந்த குழு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரெயிலில் பயணம் செய்யும் பெண் பயணிகள் பாதுகாப்பாக தங்கள் உடமைகளுடன் பயணம் செய்ய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு வட்டத்தில் உள்ள ரெயில்வே போலீஸ் நிலையங்களில், வாட்ஸ் அப் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அதில் பெண் பயணிகள், பெண் காவல் அதிகாரிகள், டிக்கெட் பரிசோதகர்கள், ரெயிலில் தொடர்ந்து பயணம் செய்யும் பெண் பயணிகள், நடைமேடையில் வேலை செய்யும் பெண்கள், ஆட்டோ, டாக்ஸி, மருத்துவர்கள் அனைத்து துறையில் உள்ள பெண்கள் முக்கியமாக சமூக ஆர்வலர்கள் இணைக்கப்படுகின்றனர்.

இந்த ரெயில் பயண குழுவில் பெண்கள் தங்களது குறைகளை பதிவிட்டால் அதை நிவர்த்தி செய்வதுடன், பெண்களின் பாதுகாப்பான பயணம் உறுதி செய்யப்படும். இதற்காக தமிழ்நாடு காவல்துறை சார்பில் 1512, ரெயில்வே பாதுகாப்பு படை சார்பில் 139 என கட்டணமில்லாத தொலைபேசிகள் இயங்குகின்றன. பெண்கள் இந்த எண்களை தொடர்பு கொண்டால் அவர்களின் குறை உடனடியாக நிவர்த்தி செய்யப்படும். நீலகிரி மலை ரெயிலில் உள்நாடு மட்டுமின்றி வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பயணிக்கின்றனர். அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்ய வேண்டும். முக்கியமாக பெண்களுக்கு பாதுகாப்பான பயணம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துகிறோம். இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் ஆய்வாளர்கள் சந்திரசீலன், நித்யா உள்பட பலர் கலந்து கொண்டு பேசினர். முடிவில் மேட்டுப்பாளையம் சிறப்பு உதவி ஆய்வாளர் ரகுநாதன் நன்றி கூறினார். முகாமில் மகளிர் சுயஉதவிக்குழுவினர், யூனிக பள்ளி மாணவிகள், அரசு செவிலியர் பயிற்சி பள்ளி, எமரால்டு ஹைட்ஜ் கல்லூரி மாணவிகள, தோடர் பழங்குடியின பெண்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழாவில் கலைநிழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. விழிப்புணர்வு முகாமிற்கான ஏற்பாடுகளை ஊட்டி இருப்புப்பாதை காவல்துறை சிறப்பு ஆய்வாளர்கள் முருகன், ரவி, தலைமை காவலர் செந்தில்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# இ-பாஸ் நடைமுறையை ரத்து செய்ய வலியுறுத்தி நீலகிரி வணிக நிறுவனங்களில் கருப்பு கொடி ஏற்றி, கருப்பு சட்டை அணிந்து வியாபாரிகள் போராட்டம்



**ஊட்டி, மார்ச்.30**

நீலகிரி மாவட்டத்தில் இ-பாஸ் நடைமுறையை ரத்து செய்ய வலியுறுத்தி வணிக நிறுவனங்களில் கருப்பு கொடி ஏற்றியும், கருப்பு சட்டை அணிந்தும் வியாபாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோடைகாலத்தில் நீலகிரி மாவட்டம் ஊட்டி, திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் போன்ற மலைப்பிரதேசங்களில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகரிக்கிறது. இதனால் அங்குள்ள சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதை தவிர்க்க கொரோனா காலத்தில் அமல்படுத்தியது போன்று இ-பாஸ் நடைமுறையை அமல்படுத்த வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

சென்னை ஐகோர்ட்டு உத்தரவின்படி கடந்த மே மேதம் 7-ந் தேதி முதல் நீலகிரி மாவட்டத்திற்கு வரும் அனைத்து வாகனங்களுக்கும் இ-பாஸ் கட்டாயமாக்கப்பட்டு உள்ளது.

நீலகிரி பதிவெண் கொண்ட உள்ளூர் வாகனங்களுக்கு இ-பாஸ் தேவையில்லை. இ பாஸ் நடைமுறையால் சுற்றுலா பயணிகள் வருகை கடந்த ஆண்டுகளை விட குறைந்ததால் வியாபாரிகள் அதிருப்தி அடைந்தனர்.

இந்தநிலையில் தற்போது ஏப்ரல் மாதம் முதல் நீலகிரிக்கு வருவதற்கு வார நாட்களில் 6 ஆயிரம் வாகனங்களும் வார இறுதி நாட்களில் 8 ஆயிரம் வாகனங்கள் மட்டுமே அனுமதிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

ஏற்கனவே இ-பாஸ் நடைமுறையால் அதிருப்தியில் இருந்த வியாபாரிகள் தற்போது வாகன கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதால் மேலும் அதிருப்தி அடைந்துள்ளனர். எனவே இ-பாஸ் நடைமுறையை ரத்து செய்ய வலியுறுத்தி 29ஆம் தேதி கருப்பு கொடியேற்றும் போராட்டமும், 2-ந் தேதி முழு அடைப்பு போராட்டமும் நடத்த திட்டமிட்டிருந்தனர்.

இதன்படி நேற்று ஊட்டி மார்க்கெட் பகுதியில் காலை முதல் வியாபாரிகள் கருப்பு சட்டை அணிந்து வந்து, வணிக நிறுவனங்களில் கருப்புக் கொடி ஏற்றினர். மாவட்டத்தின் பல இடங்களிலும் கருப்பு கொடி ஏற்றும் போராட்டம் நடைபெற்றது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், நீலகிரி மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்டுள்ள இ-பாஸ் நடைமுறையை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டும். ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் நடைமுறைக்கு வர உள்ள வாகன கட்டுப்பாட்டை தளர்த்த வேண்டும். மாவட்டத்தில் உள்ள தேயிலை பிரச்சனையை தீர்க்க வேண்டும். கட்டிடம் கட்ட அனுமதி கோரி விண்ணபித்துள்ளவர்களுக்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டும். சில்லஹல்லா அணை திட்டத்தை கைவிட வேண்டும். ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கூடலூர், பந்தலூர் மற்றும் குந்தா ஆகிய 6 தாலுகாக்களில் உள்ள 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வணிகர்கள் தங்களது இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எங்களது கோரிக்கையை நிறைவேற்றப்படாவிட்டால் மாநில அளவில் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளோம் என்றனர்.

# ஊட்டி ஆவின் வளாகத்தில் ஆவின் புட்டீஸ் எனும் புதிய உணவகம்

## எம்.பி., ஆ.ராசா திறந்து வைத்தார்



**ஊட்டி, மார்ச்.30-**

நீலகிரி மாவட்டம், ஊட்டி ஆவின் வளாகத்தில், 'ஆவின் புட்டீஸ்" என்னும் புதிய உணவு வளாகத்தை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில் நேற்று (29.03.2025) திறந்து வைத்து, பார்வையிட்டார்.

ஆவின் நிறுவனத்தில், சார்பில், நெய் பால்கோவா, குளிர்பானங்கள், இதர பொருட்கள் விற்கப்பட்டு வருகிறது. தற்போது நேற்று புதியதாக திறக்கப்பட்ட ஆவின் புட்டீஸ் உணவகத்தில், பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் உயர்தர உணவு வகைகளான பன்னீர் சில்லி, பிங்கர் பன்னீர் உள்ளிட்ட பொருட்கள் விற்கப்படுகிறது.

முன்னதாக, நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர்;, எதிர்வரும் 06.04.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தேசிய ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியில் ஆவின் வளாகத்தில், பதப்படுத்தப்பட்ட பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலையை அடிக்கல் நாட்ட உள்ளதை முன்னிட்டு, நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், ஆவின் பொது மேலாளர் மரு.ஜெயராமன், ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், நகரமன்ற துணைத்தலைவர் ரவிக்குமார், ரெட்கிராஸ் சொசைட்டி முன்னாள் சேர்மன் கேப்டன் கே.ஆர்.மணி, ஆவின் அலுவலக பணியாளர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கூட்டுறவுத் துறையின் சார்பில் நுகர்வோர் பாதுகாப்பு கூட்டம்



**ஈரோடு மார்ச் 30-**

ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா தலைமையில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரையின்படி, மார்ச் 28 அன்று ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகத்தில் நுகர்வோர் பாதுகாப்பு குழு மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளின் நிர்வாகிகள் முன்வைத்த பல்வேறு கருத்துகள் கேட்டறியப்பட்டு விரிவாக விவாதிக்கப்பட்டன. நுகர்வோர் அமைப்புகளின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ஈரோடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் த.செல்வக்குமரன் , ஈரோடு சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் ஜி.காலிதாபானு கோபி சரசு கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் இரா.முத்துச்சிதம்பரம் துணைப்பதிவாளர் (பொது விநியோத் திட்டம்) .சு.மாதேஸ் , துணைப்பதிவாளர் (பயிற்சி) .ப.அஜித்குமார் நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் செயலாளர் ஆர்.பாலசுப்ரமணியன் மாவட்டத்தில் உள்ள பல்வேறு நுகர்வோர் அமைப்புகளின் நிர்வாகிகள், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலக கூட்டுறவு சார்பதிவாளர்/கண்காணிப்பாளர்கள் மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர்/கள அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க மாநில துணைத் தலைவராக நந்தகோபால் தேர்வு

**ஈரோடு, மார்ச்.30-**

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநில துணைத்தலைவராக டாக்டர். என்.நந்தகோபால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் 1927 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச்சங்கத்தின் மாநில தேர்தல் சென்னையில் நடைபெற்றது. இந்த தேர்தலில் துணைத் தலைவராக டாக்டர். என்.நந்தகோபால் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



என்.நந்தகோபால் ஈரோடு மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவராக உள்ளார். வீரப்பன்சத்திரம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக பதவி வகித்துள்ளார். இவரது பதவி காலத்தில் இச்சங்கத்திற்கு தமிழக அரசு 2020-2021ஆம் ஆண்டுக்கான சிறந்த கைத்தறி நெசவாளர் சங்கமாகவும், சிறந்த நெசவாளர்கான விருதும் பெற்றுள்ளது.

ஈரோடு மாவட்ட அனைத்து கைத்தறி சங்கங்களின் சம்மேளனத்தில் மாவட்ட இயக்குனராகவும், ஈரோடு மாவட்ட நூல் மற்றும் சாயக் கூலி நிர்ணய குழு கமிட்டி உறுப்பினராகவும், தமிழ்நாடு அரசு ஜவுளி ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார். தற்போது ஈரோடு, கோட்டை செங்குந்த திருமண மண்டபத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும், ஈரோடு மாவட்ட பாக்சிங் அகாடமி துணைத் தலைவராகவும் பதவி வகித்து வருகிறார். தமிழ்நாடு கைத்தறி நெசவு தொழிலாளர் சங்க மாநிலத் தலைவராக உள்ளார் மேலும் பல்வேறு தொழில் சார்ந்த அமைப்புகளில் பதவி வகித்து வருகிறார் கொரோனா காலகட்டத்தில் அனைத்து சமூக மக்களுக்கும் அத்யாவசிய பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களும், மருந்துகளும் வழங்கினார். மாணவ மாணவியருக்கு கல்வி உதவிகள், விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது தொடர்ந்து செய்து வருகிறார். இவரது பொது சேவை மற்றும் சமூக சேவையை பாராட்டி பிராம்டன் இன்டர்நேஷனல் யூனிவர்சிட்டி கனடா மற்றும் பாரதியார் சமூக கலாச்சார அகாடமி இணைந்து கௌரவ டாக்டர் பட்டம் மற்றும் சேவா ரத்னா விருது

வழங்கினர். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநில துணைத் தலைவராக வி. எஸ். செங்கோட்டைய முதலியார், ஜெ.சுத்தானந்தம், ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் ஆகியோர் வரிசையில் தற்போது என்.நந்தகோபால் இடம்பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. என்.நந்தகோபால் மாநில துணைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டதற்கு தொழிலதிபர்கள், அரசியல் பிரமுகர்கள், செங்குந்த முதலியார் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள், சங்கத்தின் மாநில, மாவட்ட, மற்றும் கிளை சங்க நிர்வாகிகள் உள்பட பலரும் வாழ்த்துக்களை தெரிவித்து உள்ளனர்.

# செஞ்சி, வல்லம் ஒன்றியத்தில் ஆர்ப்பாட்டம்

**செஞ்சி. மார்ச். 30 .**

மயிலம் சட்டமன்றத் தொகுதி வல்லம் ஒன்றியம் திமுக சார்பில் நாட்டார்மங்கலம், திருவம்பட்டில் 100 நாள் வேலை திட்டத்திற்கு நிதி வழங்காத மோடி அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா தலைமை தாங்கி கண்டன ஆர்ப்பாட்டம் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். ஒன்றிய செயலாளர்கள் வடக்குஅண்ணாதுரை, தெற்கு துரை,மத்திய இளம்வழுதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர்ஒன்றிய குழு தலைவர் அமுத ரவிக்குமார்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அண்ணாமலை,மாவட்ட பிரதிநிதிகள் துரை திருநாவுக்கரசு,ராமதாஸ், கண்ணன், துணை செயலாளர்கள் பாண்டியராஜன், லட்சுமணன்,அவைத்தலைவர் ராமகிருஷ்ணன், ,விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சந்திரன் ,தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் கார்வண்ணன்,ஒன்றிய கவுன்சிலர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சாகர் சர்வதேசப்பள்ளியின் யு.கே.ஜி. வகுப்பிற்கான பட்டமளிப்பு விழா




**ஈரோடு மார்ச் 30-**

ஈரோடுமாவட்டம்பெருந்துறையில்உள்ளசாகர் சர்வதேசப்பள்ளியில் யு. கே. ஜியிலிருந்து முதல் வகுப்பிற்கு அடியெடுத்து வைக்கும் மாணவ, மாணவியர்களுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. தலைவர் ஆறுமுகம், தாளாளர் மற்றும் செயலாளர் சௌந்திரராஜன் பொருளாளர்.. எஸ் கே. பழனிசாமி , உபதலைவர் கிருஷ்ணன் இணைச் செயலாளர் சாமிநாதன் மற்றும் முதல்வர் ஆர். ஷீஜா, கல்வி இயக்குனர் சுரேந்திரரெட்டி, கே. ஜி வகுப்பின் ஒருங்கிணைப்பாளர் கார்த்திகாசாமிநாதன், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். முதல்வர் வரவேற்றார் பின் பள்ளியின் தாளாளர் அரிமா. சி. சௌந்திரராஜன் சிறப்புரையாற்றி குழந்தைகளுக்கானபட்டங்களைவழங்கினார். மழலைச் செல்வங்கள் பட்டமளிப்பு விழா உடை அணிந்து பட்டமளிப்பு சான்றிதழ்களைப்பெற்றுக்கொண்டனர். விழாவில் மழலைச்செல்வங்கள் தாங்கள் கற்றபாடல்கள் மற்றும் தொகுப்புகளைப் பெற்றோர்கள்முன்பு பாடிகாட்டினர். பள்ளி சார்பாக குழந்தைகள் அனைவரையும் ஒருங்கிணைத்து புகைப்படங்கள் எடுக்கப்பட்டது.

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

# தண்ணீரின் முக்கியத்துவத்தினை அனைத்து தரப்பினரும் அறிந்து சிக்கனமாக பயன்படுத்த முன்வர வேண்டும்

## கிராம சபைக் கூட்டத்தில் கலெக்டர் இரா.பிருந்தாதேவி வேண்டுகோள்



**சேலம்,மார்ச்.30-**

உலக தண்ணீர் தினத்தையொட்டி, சேலம் மாவட்டத்தில் நடைபெறும் கிராம சபைக்கூட்டங்களில் ஒன்றான அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம், வீராணம் ஊராட்சியில் (29.03.2025) கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, பார்வையாளராகக் கலந்து கொண்டு பேசியதாவது:

உலக தண்ணீர் தினம் மார்ச் 22 அன்று ஆண்டுதோறும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. உலக தண்ணீர் தினத்தையொட்டி சேலம் மாவட்டத்தில் உள்ள 385 ஊராட்சிகளிலும் இன்றைய தினம் கிராமசபைக் கூட்டம் நடத்தப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை 2025 ஆம் ஆண்டிற்கான உலக தண்ணீர் தினத்தினை "பனிப்பாறை பாதுகாப்பு* என்கிற சிறப்பு கருப்பொருளினை அடிப்படையாகக் கொண்டு இன்றைய கூட்டம் நடத்தப்படுகிறது. நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்கு "2030*-க்குள் அனைவருக்கும் தண்ணீர் மற்றும் சுகாதாரம் சென்று சேர்ந்திட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அந்த இலக்குகளை அடைய, நாம் தனிமனிதனாக, குடும்பமாக, சமூகமாக இணைந்து செயல்பட வேண்டும்.

குறிப்பாக 2024-25-ஆம் நிதியாண்டிற்கு தீண்டாமை கடைபிடிக்காத மற்றும் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமமாக சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட உங்களது வீராணம் கிராம ஊராட்சி தேர்வு செய்யப்பட்டு ரூ.10 இலட்சம் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. வீராணம் கிராம பொதுமக்களாகிய உங்களுக்கு எனது வாழ்த்துக்களையும், இதே நடைமுறையை தொடர்ந்து கடைபிடித்திட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். இந்நிதியை இக்கிராம ஊராட்சியில் குடிநீர் வசதி மற்றும் சாலை வசதிகளை மேம்படுத்தவும், பள்ளி மற்றும் குழந்தைகள் நல மையக் கட்டடம் கட்டுவதற்கும், கால்நடைகளுக்கு தண்ணீர் தொட்டி கட்டுவதற்கும், புதிய மின் விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள பயன்படுத்திக்கொள்ளலாம்.

மேலும், இன்றைய தினம் நடைபெற்ற கிராமசபைக் கூட்டங்களில் "முழு எழுத்தறிவு பெற்ற நகர, கிராம பஞ்சாயத்து" என்ற இலக்கை அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது குறித்தும், அனைத்து வீடுகளுக்கும் 100 சதவீத குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது குறித்தும் உள்ளிட்ட பல்வேறு பொருள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தெரிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து தீண்டாமை கடைபிடிக்காத மற்றும் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமமாக இந்த ஆண்டு வீராணம் கிராம ஊராட்சி தேர்வு செய்யப்பட்டு அரசால் ரூ.10 இலட்சம் கிராம வளர்ச்சிக்காக பரிசு வழங்கப்பட்டதையொட்டி வீராணம் கிராம பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமபந்தி விருந்தில் கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, பங்கேற்றார்கள். இக்கூட்டத்தில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருவரங்கன், குணவதி மற்றும் இரத்தினவேல் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டம்

## கலெக்டர் ரெ.சதீஸ் பங்கேற்பு



**தருமபுரி,மார்ச்.30-**

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், அதியமான்கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு (29.03.2025) நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் கலெக்டர் ரெ.சதீஸ், சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டார்கள்.

இக்கிராம சபைக்கூட்டத்தில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி மற்றும் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஷ்வரன் கலந்துகொண்டு, சிறப்பித்தனர். இக்கிராம சபைக் கூட்டத்தில் உலக தண்ணீர் தினத்தின் கருப்பொருளினைப் பற்றி விவாதிக்கப்பட்டதோடு, அதியமான் கோட்டை கிராம ஊராட்சியின் நிர்வாகம் மற்றும் பொது செலவினங்கள், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, சுத்தமான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்தல், RA வரைபடம் (FRA Atlas) சாத்தியமுள்ள கிராமங்களில் கிராம சபா அளவிலான வன உரிமை குழுக்கள் உருவாக்குதல், குழந்தைகள் பாதுகாப்பு, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் பெண் குழந்தைகளுக்காக செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்கள், தொழுநோய் விழிப்புணர்வு, உள்ளிட்ட பல்வேறு பொருண்மைகள் குறித்து விவாதிக்கப்பட்டு, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இச்சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் கலெக்டர் ரெ.சதீஸ், இ.ஆ.ப., கலந்து கொண்டு, பேசும்போது தெரிவித்ததாவது:-தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் உள்ள 251 ஊராட்சிகளிலும் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு, சிறப்பு கிராம சபைக்கூட்டம் நடைபெறுகின்றது. இந்த அதியமான் கோட்டை ஊராட்சியில் நடைபெறுகின்ற இச்சிறப்பு கிராம சபைக்கூட்டத்தில் கலந்து கொள்வதில் மிகவும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அனைத்து வீடுகளிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அமைத்து மழைநீர் சேகரிப்பதன் மூலம் மண் வளம் மேம்படுவதோடு, நிலத்தடி நீர் மட்டமும் உயரும். பொதுமக்கள் குடிநீரை வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும். ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப்பைகளை முற்றிலும் பயன்படுத்தக்கூடாது. நெகிழிப்பைகளை தூக்கி எறிவது போன்ற செயல்களை செய்யக்கூடாது. கடைகளுக்கு பொருள்கள் வாங்கச் செல்லும் போது மீண்டும் மஞ்சப்பை என்பதை நினைவில் கொண்டு. துணிப்பைகளை எடுத்துச்செல்ல வேண்டும். அனைத்து வீடுகளிலும் திடக்கழிவுகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வழங்குவதை உறுதி செய்திட வேண்டும்.

இதுபோன்ற தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் பொதுமக்கள் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்களை கடைக்கோடி கிராமங்களுக்கும் கொண்டு சேர்க்கும் பணியினை மாவட்ட நிர்வாகம் முனைப்போடு செயல்படுத்தி வருகின்றது. கிராமங்களின் வளர்ச்சி மிக முக்கியமான ஒன்றாகும். அந்த வகையில் கிராமங்களின் வளர்ச்சிக்கு அரசு செயல்படுத்தி வருகின்ற திட்டங்களை பொதுமக்களும் முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் ரெ.சதீஸ், தெரிவித்தார்கள்.

மேலும், இந்த சிறப்பு கிராம சபை கூட்டத்தில் அரசு துறை அலுவலர்களும், ஊராட்சி மன்ற உறுப்பினர்களும், ஊராட்சியிலுள்ள வாக்காளர்கள், பொதுமக்கள், மகளிர் சுய உதவி குழுவினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உட்பட அனைத்து தரப்பு மக்களும் அதிக அளவில் பங்கேற்றார்கள்.

இக்கிராம சபைக்கூட்டத்தில் காசநோய் இல்லா தமிழ்நாடு உறுதிமொழி மற்றும் தொழுநோய் ஒழிப்பு உறுதிமொழி கலெக்டர் ரெ.சதீஸ், தலைமையில் ஏற்கப்பட்டது. பின்னர், தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், அதியமான்கோட்டை ஊராட்சி, காலபைரவர் கோயில் அருகில் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் ரூ.15.80 இலட்சம் மதிப்பீட்டில் பைரவபுஷ்பகரணி புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதை கலெக்டர் ரெ.சதீஸ், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் மண்டல உதவி திட்ட அலுவலர் உமா, தருமபுரி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) நிர்மல் ரவிக்குமார், ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்ட செயற்பொறியாளர் சிவக்குமார், நல்லம்பள்ளி வட்டாட்சியர் சிவக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலைவாணி, இளங்குமரன் உட்பட அரசுத் துறை அலுவலர்கள், கைம்பெண் நலவாரிய உறுப்பினர் ரேணுகாதேவி, முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் தண்ணீர் பந்தல்

## துணைப் பொதுச் செயலாளர் கே.பி முனுசாமி துவக்கி வைத்தார்



**கிருஷ்ணகிரி,மார்ச்.30-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடந்தது. அதனடிப்படையில் ஊத்தங்கரை நான்கு முனை சந்திப்பில் ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் தமிழ் செல்வம் தலைமையில் மாவட்டச் செயலாளர் அசோக்குமார் முன்னிலையில் சிறப்பு அழைப்பாளராக துணை பொதுச் செயலாளரும் வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினருமான கே.பி முனுசாமி கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு வெயிலின் தாகத்தை தணிக்க கூடிய தர்பூசணி, மோர், இளநீர், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்,பழம்வகைகள் உள்ளிட்ட குளிர்பானங்களை வழங்கினார்,

இதை அடுத்து சிங்காரப்பேட்டை, அனுமந்திர்த்தம் உள்ளிட்ட பகுதியில் நீர் மோர் பந்தலை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.இ.கே கிருஷ்ண மூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் சாகுல் அமீது, நகர செயலாளர் சிக்னல் ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் சாமிநாதன், வேங்கன், வேடி, மாவட்ட மருத்துவ அணி டாக்டர் இளையராஜா, அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர் வீரமணி, ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் குணசேகரன் உள்ளிட்ட ஏராளமான அதிமுக கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம்

## கலெக்டர் ச. உமா தலைமையில் நடைபெற்றது

**நாமக்கல்,மார்ச்.30-**

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், சிறுநல்லிகோவில் ஊராட்சியில் (29.3.2025) கலெக்டர் மருத்துவர் ச.உமா, தலைமையில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் மருத்துவர் ச. உமா, தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

குறிப்பாக மீண்டும் மஞ்சப்பை இயக்கத்தை தொடங்கி வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "மீண்டும் மஞ்சப்பை" திட்டத்தின் மூலம் நீர், நிலம், காற்று மாசுபாடு குறைத்து, நெகிழிப் பயன்பாடு இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம். மஞ்சப் பை சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் அடையாளம் என்னும் வகையில், நெகிழிப் பைகளை முற்றிலும் தவிர்த்துத் துணிப்பை மற்றும் பாத்திரங்கள் கொண்டு செல்லும் பழக்கத்திற்குப் பொதுமக்கள் அனைவரும் மாற வேண்டும். கழிவுகளை மக்கும் கழிவு, மக்காத கழிவு என பிரித்துத் தூய்மைப் பணியாளர்களிடம் கொடுக்கும் பழக்கத்தை அனைவரும் கடைபிடிக்க வேண்டும். கழிவுகளை தீ வைத்து எரிக்கும் பழக்கத்தை முற்றிலும் தவிர்ப்போம்.

முடிந்தவரை கழிவுகளை மறுசுழற்சிக்குப் பயன்படுத்துவோம். மக்கும் கழிவுகளை இயற்கை உரமாக மாற்றி பயன்படுத்துவோம். குளம், குட்டை, ஏரி போன்ற நீர்நிலைகளை தூர்வாரி அதில் தூய மழைநீர் சேமிப்போம். கழிவுகளை நீர்வழிப் பாதை மற்றும் நீர்நிலைகளில் கொட்டுவதைத் தவிர்ப்போம்.' எனவே, பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்கி மாசில்லாத் தமிழ்நாட்டை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம். நாமக்கல் மாவட்டத்தை நெகிழி இல்லாத மாவட்டமாக உருவாக்கிட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என கலெக்டர் மருத்துவர் ச.உமா, தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து, கலெக்டர் தலைமையில் பசுமை உறுதிமொழியான "நான் புவியையும் அதன் இயற்கைச்சூழலையும் என்னால் இயன்றவரை பாதுகாப்பேன். சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்துவதில் நான் கவனம் செலுத்துவேன். நாம் உருவாக்கும் கழிவுகளைக் குறைக்க நான் நடவடிக்கை எடுப்பேன். நான் அதிகமாக மரங்களை நடுவேன். நான் ஆற்றல் மற்றும் தண்ணீரைப் பாதுகாத்து பேணுவேன். பசுமை நற்குணங்களைக் கடைப்பிடிப்பேன்" என்ற உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.வடிவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, வேளாண்மை இணை இயக்குநர் பெ.கலைச்செல்வி, தோட்டக்கலைத் துணை இயக்குநர் மா.புவனேஷ்வரி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உலக தண்ணீர் தினத்தையொட்டி நடைபெற்ற கிராம சபை கூட்டம்

## கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது

**கிருஷ்ணகிரி,மார்ச்.30-**



கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், பெண்ணேஸ்வரமடம் கிராமத்தில் உலக தண்ணீர் தினத்தையொட்டி நடைபெற்ற கிராம சபைக் கூட்டம் கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில்நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்தும், 2024-25 கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை குறித்தும், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், கலைஞர் கனவு இல்லம், பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், தூய்மை பாரத இயக்கம், மாற்றுத்திறனாளிகள் நல உரிமை திட்டங்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்ட பணிகள், பண்ணை சாரா திட்ட பணிகள், ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் தூய்மையான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்வது குறித்தும் கிராம சபை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கலெக்டர் பேசும்பொழுது:

உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபா கூட்டம் நடைபெறுகிறது. நீரின்றி அமையாது உலகெனின் என்கிற உன்னத வரிகளுக்குகேற்ப தண்ணரே அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமாக உள்ளது. தண்ணீர் விலை மதிப்பு இல்லா ஒரு பொருளாகவும் உள்ளதினால் நீடித்து நிலைத்து பல்லாண்டுகளுக்கு பயன்பத்திடும் வகையில் அதனைப் போற்றி பாதுகாத்திட வேண்டிய தருணத்தில் நாம் உள்ளோம். என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராம சபைக் கூட்டம் உங்கள் கிராம வளர்ச்சி மற்றும் பயனாளிகள் தேர்வு போன்ற பணிகளுக்காக நடைபெறுகிறது. எனவே பொதுமக்கள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த நீர்வளத்தை பாதுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார். இக்கூட்டத்தில் ஊ ரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மா கதேவன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன், பாபி பிராஸ்சினா, வட்டாட்சியர் சின்னசாமி, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வருவாய்த் துறை உள்ளிட்ட துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# ஊத்தங்கரை அருகே ஸ்ரீ பால வித்யா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா

**கிருஷ்ணகிரி,மார்ச்.30-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்து கல்லாவியில் ஸ்ரீ பால வித்யா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது. இவ்விழா தொடக்கத்தில் சிறப்பு அழைப்பாளராக திரைப்பட நடிகரும் தயாரிப்பாளருமான தாமு கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி மாணவர்கள் மத்தியிலே சிறப்புரை ஆற்றி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார். முன்னதாக பள்ளியின் தாளாளரும் நிறுவனருமான சம்பத் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் பள்ளியின் முதல்வர் பள்ளியின் ஆண்டறிக்கை வாசித்தார், இந்த நிகழ்ச்சியில் பேச்சுப் போட்டி, கவிதை, கட்டுரை போட்டி, நடன நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளியின் இருபால் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# தர்மபுரி மாவட்டம் செல்லியம்பட்டி ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

## வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையில் நடைபெற்றது

**தர்மபுரி,மார்ச்.30-**

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம் செல்லியம்பட்டி ஊராட்சியில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே நடைபெற்றது. இதில் தண்ணீரின் முக்கியத்துவம் குறித்தும் தண்ணீரை எவ்வாறு சிக்கனமாக பயன்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்திற்கு அரசு அலுவலர்கள் மீனா ஜீவிதா முனிரத்தினம் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் அங்கன்வாடி பணியாளர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் முன்னதாக தீர்மானங்களை ஊராட்சி செயலாளர் சுமதி வாசித்தார்.

# திமுக சார்பில் ஆர்ப்பாட்டம்

**கும்பகோணம்,மார்ச்.30-**

தமிழ்நாட்டின் 100 நாள் வேலை உறுதி திட்ட நிதி 4000 கோடியை தமிழ்நாட்டிற்கு தராமல் ஏழை எளியவர் வயிற்றில் அடிக்கும் பா.ஜ.க அரசை கண்டித்து குடந்தை மேற்கு ஒன்றியம் திருவலஞ்சுழி ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர் S.K.முத்துசெல்வம் தலைமையில் 900-க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துக்கொண்ட கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.. ஆர்ப்பாட்டத்தில் யாரு மேற்கு ஒன்றியம் அவைத் தலைவர்லோகநாதன் பொருளாளர்இளங்கோவன் மாவட்ட பிரதிநிதிகரிகாலன்அன்பழகன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் குருசாமி. திவ்யா.காமராஜ். குடந்தை மாநகரக் கழக அவைத் தலைவர் எஸ்.வாசுதேவன் கும்பகோணம் மாநகரக் கழக பொருளாளர் எஸ்.ரவிச்சந்திரன் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்...

வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
கிருஷ்ணகிரி
ந.க.எண்.மே.எ.அதிமு.1920/2025/டி
நாள்:18.03.2025
ரகுவரன், த/பெ.மாரியப்பன்,
கோவிந்தாபுரம் அஞ்சல் மற்றும் கிராமம், ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 307
..........மனுதாரர்
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.
........எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய, எனது மகள் R.ஸ்ரீமதி த/பெ.ரகுவரன் என்பவர் கடந்த 23.09.2011-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கோவிந்தாபுரம் அஞ்சல் மற்றும் கிராமத்தில் உள்ள எனது வீட்டில் பிறந்தார். மேற்படி எனது மகளின் பிறப்பை பதிவு செய்து பிறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
//உத்தரவுப்படி//
மனுதாரர்
ரகுவரன், த/பெ.மாரியப்பன்,
கோவிந்தாபுரம் அஞ்சல் மற்றும் கிராமம், ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 307
செல்: 7010590928

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
பி.இ.சிய. எண்.134 / 2025 / டி
சுப்ரமணி, S/O. சடையன்,
க.எண்.2 / 47, காசிமாரியூர்,
வைகுந்தம் கிராமம் ,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
.......... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர் அவர்கள்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
..... எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரரின் தாய்வழி பாட்டனார் பழனிகவுண்டர் என்பவர் கடந்த 14 – 03 – 1970 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேன்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப் பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் –கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
/ நீதிமன்ற உத்தரவு படி /
A. JAYARAJU, B.A., B.L.,
ADVOCATE, IDAPPADI.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
பி.இ.சிய. எண்.136 / 2025 / டி
சுப்ரமணி, S/O. சடையன்,
க.எண்.2 / 47, காசிமாரியூர்,
வைகுந்தம் கிராமம் ,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
.......... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர் அவர்கள்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
..... எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரரின் தாய்வழி பாட்டி சுந்தாயி (எ) சுந்தாயம்மாள் என்பவர் கடந்த 10 – 06 – 1996 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேன்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப் பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் –கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
/ நீதிமன்ற உத்தரவு படி /
A. JAYARAJU, B.A., B.L.,
ADVOCATE, IDAPPADI.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
பி.இ.சிய. எண்.135 / 2025 / டி
மணிகண்டன், S/O. அம்மாசி,
க.எண்.2 / 25, காசிமாரியூர்,
வைகுந்தம் கிராமம் ,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
.......... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர் அவர்கள்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
..... எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தாயார் பார்வதி, க/பெ. அம்மாசி என்பவர் கடந்த 04 – 07 – 2004 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேன்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப் பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் –கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
/ நீதிமன்ற உத்தரவு படி /
A. JAYARAJU, B.A., B.L.,
ADVOCATE, IDAPPADI.

வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
கிருஷ்ணகிரி
ந.க.எண்.மே.எ.அதிமு.1919/2025/டி
நாள்:18.03.2025
ரகுவரன், த/பெ.மாரியப்பன்,
கோவிந்தாபுரம் அஞ்சல் மற்றும் கிராமம், ஊத்தங்கரை அஞ்சல் மற்றும் வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 307
..........மனுதாரர்
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.
........எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய, எனது மகன் R.நந்தகுமார் த/பெ.ரகுவரன் என்பவர் கடந்த 03.01.2008-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கோவிந்தாபுரம் அஞ்சல் மற்றும் கிராமத்தில் உள்ள எனது வீட்டில் பிறந்தார். மேற்படி எனது மகனின் பிறப்பை பதிவு செய்து பிறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
//உத்தரவுப்படி//
மனுதாரர்
ரகுவரன், த/பெ.மாரியப்பன்,
கோவிந்தாபுரம் அஞ்சல் மற்றும் கிராமம்,
ஊத்தங்கரை அஞ்சல் மற்றும் வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 307
செல்: 7010590928

கனம் சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை.
இடை மனு எண். /2025
In O.S.No.08/2016
1. பெருமாள்சாமி
2. சிவகுருசாமி
...மனுதாரர்கள்/வாதிகள்
/ Vs /
குணப்பிரியா, த/பெ.காளிதுரை,
கே.பாப்பாரப்பட்டி கிராமம்,
மோட்டூர் PO, ஊத்தங்கரை TK,
கிருஷ்ணகிரி DT.
...எதிர்மனுதாரர்/ 10 ம் பிரதிவாதி
10 ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு
மேற்கண்ட வாதி கனம் நீதிமன்றத்தில் தங்களுக்கு எதிராகவும் மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராகவும் விளம்புகை மற்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார். அவ்வழக்கு வருகின்ற 28.04.2025 -ம் தேதியன்று தங்களது முன்னிலைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது.அவ்வழக்கில் வாதிகள் கோரியுள்ள பரிகாரத்தில் 10 ம் பிரதிவாதி ஆகிய தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் வருகின்ற 28.04.2025 -ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ முன்னிலையாகி தங்களது ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் வழக்கு உமக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியுவம்.
/கோர்ட் உத்தரவுப்படி/
R.சந்திரசேகரன்,
வழக்கறிஞர்/நோட்டரி,
ஊத்தங்கரை.

கனம் சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை.
இடை மனு எண். 3/2024
In அசல் வழக்கு எண்.170/2023
கஜேந்திரன்
...மனுதாரர்/வாதி
/ Vs /
சுதாகர், த/பெ. வேடியப்பன்,
வளத்தானூர் கிராமம்,காரப்பட்டு PO,
ஊத்தங்கரை TK, கிருஷ்ணகிரி DT.
...1 ம் எதிர்மனுதாரர்/ 1 ம் பிரதிவாதி
1 ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு
மேற்கண்ட வாதி கனம் நீதிமன்றத்தில் தங்களுக்கு எதிராகவும் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளைபரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார். அவ்வழக்கு வருகின்ற 21.04.2025 -ம் தேதியன்று தங்களது முன்னிலைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது.அவ்வழக்கில் வாதிகள் கோரியுள்ள பரிகாரத்தில் 1 ம் எதிர்மனுதாரர் / 1 ம் பிரதிவாதி ஆகிய தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் வருகின்ற 21.04.2025 -ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ முன்னிலையாகி தங்களது ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் வழக்கு உமக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியுவம்.
/கோர்ட் உத்தரவுப்படி/
R.சந்திரசேகரன்,
வழக்கறிஞர்/நோட்டரி,
ஊத்தங்கரை.

கனம் சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை.
இடை மனு எண். /2025
In O.S.No.57/2021
1. வரதராஜன்
2. செந்தில்குமார்
...மனுதாரர்கள்/வாதிகள்
/ Vs /
தயாநிதி, த/பெ. புட்டன் (எ) பூவன்,
வேலம்பட்டி கிராமம்,
எம்.வெள்ளாளப்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை TK, கிருஷ்ணகிரி DT.
...எதிர்மனுதாரர்/ 6ம் பிரதிவாதி
6 ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு
மேற்கண்ட வாதி கனம் நீதிமன்றத்தில் தங்களுக்கு எதிராகவும் மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராகவும் விளம்புகை ஆவணம் செல்லாது மற்றும் தடை உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக வேண்டி தாக்கல் செய்துள்ளார். அவ்வழக்கு வருகின்ற 25.04.2025 -ம் தேதியன்று தங்களது முன்னிலைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது.அவ்வழக்கில் வாதிகள் கோரியுள்ள பரிகாரத்தில் ஏதேனும் தங்களுக்கு ஆட்சேபனை இருப்பின் வருகின்ற 25.04.2025 -ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ முன்னிலையாகி தங்களது ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் வழக்கு உமக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியுவம்.
/கோர்ட் உத்தரவுப்படி/
R.சந்திரசேகரன்,
வழக்கறிஞர்/நோட்டரி,ஊத்தங்கரை.

உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், மேட்டூர்.
இ.ப.சி.ப.எண்.270/2025
ஆ.ஆதிமூலம்,
த/பெ. ஆறுமுக கவுண்டர் (லேட்),
க.எண்.31/3-26, ராஜா தெரு,
பவளத்தானூர், குறுக்குப்பட்டி கிராமம்,
ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம்.
...மனுதாரர்
/ Vs /
1. திரு.வட்டாட்சியர் அவர்கள்,
ஓமலூர்.
2. திரு. பிறப்பு / இறப்பு அலுவலர்,
ஓமலூர்.
...எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
மேற்படி மனுதாரரின் தனது தந்தைஆறுமுக கவுண்டர், த/பெ. ராமகவுண்டர் கடந்த 14.01.1995 ம் தேதியன்று சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், குறுக்குப்பட்டி கிராமம், பவளத்தானூர், ராஜா தெரு, க.எண். 31/3-26 என்ற முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர்கள் நிர்வாகிக்கும் இறப்பு மற்றும் பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறியதால் மேற்படியாரின் இறப்பை எதிர்மனுதாரர்கள் அலுவலக இறப்பு பதிவேட்டில் புதியதாக பதிவு செய்ய உத்திரவு வழங்க வேண்டி சார் ஆட்சியர் மற்றும் வருவாய்கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி இறப்பு பதிவு குறித்து எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனையை இவ்விளம்பரம் கண்ட 7 தினங்களுக்குள் மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
/நீதிமன்ற உத்தரவுப்படி/
P.சிவக்குமார், B.A.,B.L.,
வழக்கறிஞர், சேலம்-30

